1972 மார்ச் 4]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, பல கட்ட விற்பனை வரி, ஒருமுனை விற்பனை வரி போன்றவற்றிற்கும், விலைவாசிகளைக் கூட்டுவதற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை.

* 301 வினா—திரு. எம். முத்தையா : மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) ரேடியோ மீது விதிக்கப்படும் விற்பனை வரியை குறைக்க வேண்டுமென்று ரேடியோ தயாரிப்பாளர்கள் ஏதேனும் வேண்டுகோள் விடுத்துள்ளார்களா ;

(இ) ஆம் எனில், அது பற்றி அரசு எடுத்த நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) கோரிக்கை அரசால் பரிசீலிக்கப்பட்டு ரேடியோமீது விதிக்கப்படும் விற்பனை வரியை குறைக்க இயலாமை தெரிவிக்கப் பட்டது.

Court for Valliyur

* 302 *Q.*—THIRU T. GANAPATHY : Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is any proposal to locate a District Munsif-*cum*-Sub-Divisional Magistrate Court at Valliyur in Nanguneri taluk?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், புதிதாக டிஸ்டிரிக்ட் முன்சீப் கோர்ட்டுகள் அமைப்பதற்காகவும், எந்தெந்த இடங்களில் எந்த எந்த அளவிற்கு அவரவர்களுடைய ஜுரிஸ்டிக்ஷன் இருக்க வேண்டுமென்பதற்காகவும் வரதராஜன் தலைமையிலே ஒரு குழு ஓராண்டுக்காலமாக இருக்கிறதே, அந்தக் குழு தனது சிபாரிசுகளைக் கொடுத்திருக்கிறதா ? அப்படி வந்து விட்டால் அதிலே இந்த வள்ளியூர் போன்ற இடங்களும் சேர்க்கப்பட்டுள்ளனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அரசாங்கத்திற்கு அறிக்கை இன்னும் வரவில்லை.